சாட்சிகளின் வாக்குமூலம்
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 22/2015**
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
வாக்குமூலம் – பி.வா.சா. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாச்சாத்தாள் | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 13.07.2026 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு ஜுலை 13ம் நாள் சாட்சியம்.

---

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் வாதிகள் சுள்ளிபெருக்கிபாளையத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது பூமிக்கு மேல்புறத்தில் உள்ள க.ச.எண்.194–ல் கட்டுப்பட்ட பூமியானது சென்னிமலை கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த க.ச.எண்.194–ல் கட்டுப்பட்ட சொத்திற்கு மேல்புறம் உள்ள க.ச.எண்.195–ல் கட்டுப்பட்ட பூமியானது எங்களின் மற்றொரு பங்காளிக்கு பாத்தியப்பட்டது. அதற்கு மேல்புறம் சுள்ளிபெருக்கிபாளையம் செல்வதற்கான தார் சாலை உள்ளது. இந்த வழக்கின் வாதிகளுக்கு சுள்ளிபெருக்கிபாளையத்திலும் பாபாவலசுவிலும் குடியிருப்பு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். தார் ரோட்டிலிருந்து வழக்கு தடத்தின் வழியாகத் தான் எனது பூமிக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். எனது பூமி, சென்னிமலைகவுண்டர் பூமி மற்றும் வாதிகளின் பூமி ஆதியில் ஒரே நபருக்கு

பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆதி பாத்திஸ்தர்களிடமிருந்து எங்கள் பூமி மற்றும் எங்களுக்கு மேல்புற பூமி மற்றும் வாதிகள் பூமி கிரையம் பெறப்பட்டது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

2. எனது பூமி வரை உள்ள தடத்தின் அகலமானது 4 அடி ஆகும். எனது பூமிக்கு வண்டி, வாகனங்கள் செல்ல இயலாது. 10 வருடங்களான நான் எனது பூமியில் விவசாயம் செய்வதில்லை. அதற்கு முன்பாக உழவடை சமயத்தில் களப்பை மற்றும் மாடு ஓட்டிச் சென்று விவசாயம் செய்தோம். எனது பூமிக்கு மேற்கில் உள்ள சென்னிமலைக்கவுண்டரின் பூமியில் உள்ள கிணற்றில் எனக்கு உரிமை உள்ளதா என்றால் உள்ளது. வாதிகளுக்கு அந்த கிணற்றில் 1/3 பாகம் உள்ளது என்றால் பங்காளிகள் என்பதால் இருக்கலாம் என்று நினைக்கிறேன். எனக்கும் வாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பூமிகளுக்கு தென்மேற்கே 3ம் நபர் பூமியில் அமைந்துள்ள கிணற்றில் எனக்கும், வாதிகளுக்கும் பொதுவில் உரிமை உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றிலிருந்து பாசனத்திற்கான வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். வாய்க்காலின் அகலம் சுமார் 1 1/2 அடி இருக்கும். வாய்க்கால் தற்போது பயன்பாட்டில் இல்லை.

3. வழக்கு தடத்தின் வழியாக வாதிகள் செல்ல நானோ எனது முன் பாத்தியஸ்தர்களோ அனுமதி அளித்தோமா என்றால் கிடையாது. வழக்குத் தடத்தை வாதிகள் எப்போதும் பயன்படுத்தியது கிடையாது. எனது பூமியை சென்னித்துரை என்பவர் விவசாயம் செய்து வருகிறார். சென்னித்துரைக்கு தனித்து பாத்தியப்பட்ட பூமிக்கு செல்வதற்கு வேறு தடம்

உள்ளது. வாதிகள் பூமிக்கு கிழபுறமாக உள்ள வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமியானது சென்னிமலைக்கவுண்டரால் விற்பனை செய்யப்பட்டு விட்டது. சென்னிமலைக்கவுண்டரால் விற்பனை செய்யப்பட்ட பூமியின் வழியாக வழக்குச் சொத்திற்கு தடம் உள்ளதா என்றால் எனக்குத் தெரியாது. ( சாட்சி நான் எனது பூமிக்கு சென்று வருகிறேன். அவர்கள் பூமிக்கு தடம் உள்ளதா என்று தெரியாது என்று கூறினார்)

4. சென்னிமலைகவுண்டரால் விற்பனை செய்யப்பட்ட பூமிக்கு வழக்கு தடத்தின் வழியாக வாதிகள் சென்று வந்தார்கள் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வழக்குச் சொத்தை பார்வையிட்டபோது நான் அந்த இடத்தில் இல்லை. நீதிமன்ற ஆணையர் வழக்குச் சொத்தை பார்வையிடுவதற்காக அறிவிப்பை எனக்கும், 2ம் பிரதிவாதிக்கும் கொடுத்தார் என்றால் எனக்கு கொடுக்கவில்லை. தடத்திற்கு வடபுறம் கம்பி வேலி உள்ளது என்றால் சரிதான். அந்த கம்பி வேலி அவருடைய அத்தில் உள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே இருந்த முள்வேலியை அகற்றி விட்டு அதே இடத்தில் கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையரால் எனது பூமிக்கு முன்பாக தடத்தின் அகலம் சுமார் 16 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது பூமியிலிருந்து வாதிகள் பூமி வரை சுமார் 10 அடி அகலம் தடம் உள்ளதாக நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் தவறாக குறிப்பிட்டுள்ளார். எனது பூமியில் இருந்த 16 அடி அகல தடத்தில் நான் 6 அடியை ஆக்கிரமிப்பு செய்து எனது பூமியுடன் சேர்த்து விட்டேன் என்றால் சரியல்ல. எனது

பூமிக்கு மேற்குபுறம் உள்ள நபர்கள் என்னையையும், வாதியையும் தடத்தில் செல்வதற்கு ஆட்சேபணை எதுவும் செய்வதில்லை.

5. எனது பூமியில் கிழகோட்டில் தெற்கு நோக்கி 4 அடி அகலத்தில் எனது பூமிக்கு தென்புறத்தில் உள்ளவர்கள் செல்வதற்கு தடபாத்தியம் உள்ளது சரியல்ல. எனது பூமிக்கு தென்புறமாக வா.சா.2–ன் மாமனாருக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது. அவர்கள் மாமனாரின் இழப்பிற்கு பிறகு அவர் தான் அனுபவித்து வருகிறார். அவர்களுக்கு தடம் இருப்பதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அவர்களுக்கு தடம் கிடையாது. வழக்குத் தடம் 1வது வாதியின் கிரையத்திலிருந்து அனுபவித்து வந்தார் என்றும் அவருக்கு பிறகு மற்ற வாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த தடத்தினை வாதிகள் அனுபவிப்பதை நான் இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குத் தடம் 16 அடி அகலத்தில் அமைந்த தடம் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

/ஒம் /**R**.பாண்டி மகாராஜா,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

தாராபுரம்.